
# நாடோடி

தொகுத்தது

# ஸ்திரீகள், ஜாக்கிரதை !

605



பிரசுரம்

நாடோடி

தியாகராயநகர், சென்னை 17

முதற் பதிப்பு செப்டம்பர் 1947

சகல உரிமையும் ஆசிரியருக்கே

விலை ரூபாய் ஒன்று

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி, MS. 524
நாடோடி MS. 120

# முன்னுரை

நல்ல ஊறுகாய் இருந்தால்தான் சாப்பாடு ருசிக்கும். சாப்பிட்ட சாப்பாட்டை ஜீரணிக்கவும் முடியும். அதைப் போல துக்கடாக்கள் இருந்தால்தான் இலக்கிய விருந்து ருசிக்கும், அதை ஜீரணிக்கவும் முடியும்.

தமிழ்நாட்டில் இப்பொழுது எத்தனையோ நண்பர்கள் தமிழர்களுக்கு இலக்கிய விருந்து அளித்துவருகிறார்கள். ரேஷன் காலமாய் இருப்பதால் வேறு ஒரு விருந்தும் அளிப்பதற்கு இல்லை. ஆனால் முக்கால்வாசிப் பேர் இன்னும் தமிழனுக்கு பத்தியமான உணவையே அளித்துவருகிறார்கள். ஊறுகாயைக் கண்ணில்கூடக் காட்டுவது இல்லை. தமிழனுடைய உடம்பு கெட்டு விட்டால் என்ன பண்ணுவது என்ற பயமாக இருக்கலாம்.

இதுவரையில் தளையுண்டு கிடந்த தமிழனைப்பற்றி அவர்கள் கவலைகொண்டது என்னமோ, ஒருவேளை, நியாயமாக இருக்கலாம். ஆனாலும் இனியும் அது பொருந்தாது. தமிழன் தளையறுத்து சுதந்திர புருஷனாகிவிட்டான். இனி அவன் தன் இஷ்டப்பட்ட உணவை உட்கொள்ளலாம். நாக்குக்கு ருசியுள்ள பதார்த்தங்களையும் ஒரு கை பார்க்கலாம்.

நான் ஊறுகாய்ப் பிரியன். சாப்பாட்டுக்குமேல் ஊறுகாய் சாப்பிடுவேன். அதைப்போலவே துக்கடாப் பிரியன். ஆகவே வெகு காலமாக நான் படித்த புத்தகங்களில் அங்கங்கே நல்ல சாரமான விஷயங்களைக்

கண்டபோதெல்லாம் ஜாக்கிரதையாக, ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தேன்.

அவற்றைத் தமிழர்களும் அனுபவிக்கட்டும் என்று 'துக்கடா சீரிஸ்' என்ற தொகுதியில் அவ்வப்பொழுது வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறேன்.

இப் புத்தகங்களில் அங்கங்கே நம்மை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் துக்கடாக்கள் இருக்கும். பக்கத்திலேயே நம் சிந்தனையைத் தூண்டும் அறிவு விஷயங்களும் இருக்கும். எத்தனையோ அனுபவ மொழிகளும் இருக்கும்.

ஆனால் ஒன்று. இத் துக்கடாக்களைத் தமிழர்கள் ஒரே நாளிலேயே படித்து முடித்துவிடவேண்டாம்.

அவ்வப்பொழுது பொழுதுபோகாத வேளைகளில், அல்லது அலுப்பாய் இருக்கும் சமயங்களில், அங்கொன்று, இங்கொன்றுமாகப் பொறுக்கி எடுத்து வாசித்து அனுபவிக்கலாம்.

அப்படி வாசித்து அனுபவிப்பதுதான் இத் துக்கடாக்களை ரஸிப்பதற்குச் சரியான முறை.

தியாகராயநகர்
28-8-47

நாடோடி

# ஸ்திரீகள், ஜாக்கிரதை!

பொதுவாகவே நாம் ஸ்திரீகளைக் கண்டால் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறோம். நாம் அவர்களைவிட தேக வலு அதிகம் உடையவர்கள் என்றாலும் அவர்களைக் கண்டு நடுங்குகிறோம். நம் தேக பலத்தை விட அவர்கள் நாக்குக்கு அதிக பலம் இருப்பதுதான் இதற்குக் காரணமோ, என்னமோ! ஆனால், கடவுள் சிருஷ்டியில் ஒரு இனத்தினர் உள்ளனர். இவர்களில் தேக வலுவில்கூட ஸ்திரீகள்தான் உயர்ந்தவர்கள். இவர்கள் ஒரு பட்டாளம் அமைத்திருக்கிறார்கள். இந்தப் பட்டாளத்தில் புருஷர்களே கிடையாது. சேனை முழுவதும் ஸ்திரீ மயம்தான்.

இந்த இனத்தினர் யார் தெரியுமா? வேறு யாரும் இல்லை. நாம் தினம் நம் கால் முன்னே பார்க்கிறோமே, எறும்புகள், அவை தான்.

## அதிகப் பிரசங்கம்

பிரசங்கிகளைப் பற்றி ஒரு அறிஞர் பின் வருமாறு கூறுகிறார்.

பிரசங்கி எதைப்பற்றி பேசுகிறார் என்று உங்களுக்குப் புரியவில்லையானால் அதற்காகக்

கவலைப்படாதீர்கள். எதைப்பற்றி பேசுகிறோம் என்பது அவருக்கே தெரியாது.

பிரசங்கத்தை எப்பொழுது எங்கே முடிக்க வேண்டும் என்ற விஷயம் பிரசங்கிக்குத்தான் தெரியவேண்டும். சில சமயங்களில் இது விஷயத்தை பிரசங்கி தெரிந்துகொள்வதற்கு அரைமணி முன்னதாகவே பிரசங்கத்தைக் கேட்க வந்திருப்பவர்கள் தெரிந்து கொள்வதும் உண்டு.

முன்னொரு சமயம் ஒரு பிரசங்கி பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஹால் தீப்பற்றிக் கொண்டுவிட்டது. இது விஷயத்தை திடீரென்று ஜனங்களிடம் சொன்னால் ஒருவரையொருவர் மோதி அடித்துக் கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர் ஒரு யுக்தி பண்ணினர். தம் கோட்டுப் பையில் இருந்து ஒரு கத்தை காகிதத்தை வாசிப்பதற்காக எடுத்தார். அவ்வளவுதான்! கூட்டத்திலிருந்தவர்கள் மெள்ள நழுவினார்கள்.

## ஸர்தார் படேல்

ஸர்தார் படேல் வீரம் ததும்பப் பேசக்கூடியவர் மட்டுமல்ல, மிக ஹாஸ்யமாகவும் பேசக்கூடியவர். ஒரு சமயம் டில்லி சட்ட சபையில் சில கேள்விகளுக்கு அவர் அளித்த சில பதில்கள் சபையோரை குலுங்கச் சிரிக்க வைத்தன.

லைசென்ஸு இல்லாமல் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற விஷயமாக விவாதம் நடந்து கொண்டிருந்தது.

ஸ்ரீ பிரகாசா :— திருடர்களும் கொள்ளைக் கூட்டத்தாரும் மட்டும் லைசென்ஸு இல்லாமல் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளலாமா?

ஸர்தார் படேல் :— லைசென்ஸு ஒன்றும் வாங்கவேண்டாம் என்று அவர்கள் லைசென்ஸு பெற்று இருக்கின்றனர்.

ஸ்ரீ பிரகாசா :— திருடர்களும் கொள்ளைக் கூட்டத்தாரும் லைசென்ஸு இல்லாமல் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளும்பொழுது பொது ஜனங்கள் மாத்திரம் வைத்துக் கொள்ளக்கூடாதா?

ஸர்தார் படேல் :— பொது ஜனங்களும் கொள்ளைக் கூட்டத்தாராக மாறினால் லைசென்ஸு இல்லாமல் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளலாம்.

ஸ்ரீ இஷாக் சேட் :—ஸீக்கியர்கள் கிர்பான் (கத்தி) வைத்துக்கொண்டிருக்கும் பொழுது மற்ற சமூகத்தினர் ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது?

ஸர்தார் படேல் :— மற்ற சமூகத்தினரும் ஸீக்கியராக மாறினால் கிர்பான் வைத்துக்கொள்ளலாம்.

## அட மிருகமே!

மிருகங்களை விட மனிதனுக்கு அறிவு இருப்பதாக நாம் சொல்லி வருகிறோம். ஆனால், மனி

தனை விட மிருகத்துக்குத்தான் சூக்ஷ்ம சக்தி அதிகம் இருப்பதாக விஞ்ஞானிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். வரப்போகும் அபாயத்தை முன் கூட்டியே அறிந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதில் மிருகங்களை மனிதர்கள் மிஞ்ச முடியாது என்று கூறுகிறார்கள். இது விஷயத்தைப் பின் வரும் உதாரணங்கள் நிரூபிக்கின்றன.

1923-ம் வருஷம் டோக்கியோவில் பூகம்பம் ஏற்படுவதற்கு முதல் நாள் இரவு நாய்கள் ஓயாமல் ஊளையிட்டனவாம். அதைக் கேட்ட ஜனங்கள் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறதென்று நடுங்கினார்களாம். மறுநாள் பூகம்பம் ஏற்பட்டு லட்சம் பேர்கள் இறந்தார்கள்.

அஸ்ஸாமில் சில காலத்துக்கு முன் காடுகளிலிருந்து ஏராளமான மிருகங்கள் மலைப்பிரதேசத்தை நோக்கி ஓடினவாம். புலியும், மானும், பாம்பும், கீரியும் ஒன்றோடொன்று இடித்துக் கொண்டு ஓடும் அதிசயத்தை மலைப்புறவாசிகள் பார்த்து ஆச்சரியப் பட்டார்களாம். அவை மலைமேல் ஏறிப்போனதும் பிரம்மாண்டமான வெள்ளம் வந்து அந்தக் காட்டையே மூழ்கடித்ததாம்!

காகாடோ என்ற ஒரு தீவில் பூகம்பம் வருவதற்கு முன்னால் அந்தத் தீவிலுள்ள அத்தனை மிருகங்களும் அவ்விடத்தை விட்டு ஓடி விட்டனவென்றும் அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடல் முழுதும் மிருகங்கள் நீந்திய வண்ணமாக இருந்தனவென்றும்

கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது 'அட மிருகமே!' என்று மனிதனைப் பார்த்துக் கூறுவது எவ்வளவு தவறு என்று தெரிகிறதல்லவா?

## பாட்டும் பணமும்

வாக்னர் என்னும் சங்கீத வித்வான் சிறுவயதில் ஒரு பாட்டு இயற்றி, அதைப் புத்தகமாகப் போட்டு விற்கும்படி ஒரு புத்தக வியாபாரியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். புத்தகங்களும் விற்றன. ஆனால் வயதானதும் அவருக்கு அப்புத்தகம் இருப்பது அவமானமாகப்பட்டது. புத்தகங்கள் அத்தனையையும் திருப்பி வாங்கிக் கொடுத்தால், தாம் பணம் கொடுப்பதாக புத்தக வியாபாரியிடம் சொன்னார். அடுத்த நாளே ஆயிரம் புத்தகங்கள் அவர் கைக்கு வந்து சேர்ந்தன. அதிலிருந்து அவ்வப்பொழுது நூறு, இருநூறு என்று திரும்பி வரத் தொடங்கின. தமக்குப் பணம் வேண்டிய போதெல்லாம் இம்மாதிரி புதிதாக அப்புத்தகத்தை அச்சடித்து வாக்னருக்கு அனுப்புவது என்று அந்தப் புத்தக வியாபாரி தீர்மானித்து விட்டார் என்பது வாக்னருக்குத் தெரியாது.

## வரவு செலவு

ஒரு காலத்தில் ஜர்மனியை பிரடரிக் என்ற அரசர் ஆண்டு வந்தார். வரவுக்கும் செலவுக்கும் சரிக்

கட்டி அரசாங்கத்தை நடத்துவது அவருக்கு ரொம்பவும் கஷ்டமாகப் போய்விட்டது. ஆகவே, பொக்கிஷ நிலைமையைச் சமாளிக்க என்ன செய்யலாம் என்று யோசனை கேட்பதற்காகத் தமது மந்திரிகளைக் கூட்டினார்.

பலர் தமது அபிப்பிராயங்களை எடுத்துக் கூறிய பிறகு, ஒரு முதிய அதிகாரி எழுந்து, ஒரு பிளேட்டில் ஒரு கட்டி ஐஸை எடுத்து வைத்தார். அதைப் பக்கத்திலுள்ளவர் கையில் கொடுத்து அரசரிடம் அனுப்பும்படி கூறினார். அந்த பிளேட் ஒவ்வொருவர் கையாக மாறி அரசர் கைக்கு வருவதற்குள் ஐஸ் கட்டி உருகிப்போய் சுண்டைக்காய் அளவுக்கு வந்துவிட்டது.

பெரியவர் நாற்காலியில் உட்கார்ந்தார். ஆனால் அவர் உணர்த்திய படிப்பினையின் தாத்பர்யம் எல்லோருக்கும் நன்கு விளங்கிவிட்டது.

## சாப்பாட்டு ராமன்

வீட்டில் உள்ளவர்கள் வேளாவேளைக்கு சாப்பிட வருவது கிடையாது என்று நம் நாட்டு ஸ்திரீகள் எல்லாருமே அலுத்துக் கொள்ளுகின்றனர். கடியாரம் இருந்தும் சரியான சமயத்துக்கு நம்மால் ஒரு காரியமும் செய்ய முடிவதில்லை. கடியாரம் இல்லாமல் தினம் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு இடத்திற்குப் போக வேண்டும் என்றால் நம்மால் முடியவே முடியாது. என்னதான் கெட்டிக்காரர்களாய் இருந்

தாலும் ஒரு கால்மணி அரைமணி முன் பின்தான் போய்ச் சேருவோம். குறித்த வேளையில் போய்ச் சேருவதில் தேனீக்கள் நம்மைவிட எவ்வளவோ சாமர்த்தியம் வாய்ந்தவைகளாம். ஒரு குறிப்பிட்ட சமயத்துக்குத் தான் ஆகாரம் கொடுப்பது என்று வைத்தால் தேனீக்கள் எங்கு இருந்தாலும் சரி, சரியாக அந்த சமயத்துக்கு வந்து சேர்ந்து விடுமாம். அப்படி முன்னே பின்னே போனாலும் ஐந்து நிமிஷத்துக்கு மேலே போகாதாம்.

## பிடிக்கவில்லை

"ஏன் அப்பா பழைய உத்தியோகத்தை விட்டு விட்டாய்?"

"பிடிக்கவில்லை. விட்டுவிட்டேன்."

"என்ன, பிடிக்கவில்லையா?"

"ஆம், என் முதலாளிக்கு என்னைப் பிடிக்கவில்லை, விட்டுவிட்டேன்!'.

## பொதுஜன அபிப்பிராயம்

மற்றவர்கள் இதைத்தான் அபிப்பிராயப் படுகிறார்கள் என்று ஜனங்கள் அபிப்பிராயப் படுகிறார்களே அது தான் பொது ஜன அபிப்பிராயம்.

## உங்களுக்குத் தெரியுமா?

140 ராத்தல் எடையுள்ள மனிதன் உடம்பிலுள்ள கரி 9000 பென்சில்களுக்குப் போதும்.

சதுரங்கம் முதல் முதலில் இந்தியாவில் தான் தோன்றிற்று.

நாம் ஒவ்வொரு நிமிஷமும் 410 கன அங்குல காற்று உட்கொள்கிறோம்.

## 31 பல்

இரண்டு நண்பர்களுக்கிடையில் வாக்கு வாதம் பலத்தது.

முதல் நண்பன்—நீ கீழே விழுந்து முப்பத்தி ரண்டு பல்லில் முப்பத்தோறு பல் உடையணும்.

இரண்டாம் நண்பன்—ஏன் ஒரு பல்லை மட்டும் விட்டு வைத்தாய்?

முதல் நண்பன்—அது பல் வலி வந்து நீ அவஸ்தைப் படுவதற்காக.

## சேவல் கூவவே இல்லை

பெஞ்சமின் பிராங்கிளினின் நண்பர்கள் சிலர் ஒரு ஹோட்டல் அறையில் பேசிக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு நண்பர், "என்னுடைய கடியாரத்தைக் காணோமே! யாரோ திருடிக் கொண்டு விட்டார்கள்" என்று சொன்னார். அந்த சமயம் பெஞ்சமின் பிராங்கிளின் உள்ளே நுழையவே, கடியாரம் திருட்டுப் போன விஷயத்தை அவரிடம் சொன்னார்கள்.

திருடனைக் கண்டு பிடிப்பதற்கு பிராங்கிளின் ஒரு யுக்தி கூறினார். எல்லாக் கதவுகளையும் மூடச்

சொல்லி விட்டு ஒரு கெட்டிலும், சேவலும் கொண்டு வந்தார். கெட்டிலுக் கடியில் சேவலை வைத்து விட்டுச் சொன்னார். "நான் இப்பொழுது விளக்கு களை அணைக்கப் போகிறேன். எல்லாரும் கெட்டி லைத் தொடவேண்டியது. யார் கடியாரத்தை திரு டினார்களோ, அவர் கெட்டிலைத் தொட்டதும் சேவல் கூவும்" என்றார்.

இந்த யோசனையைக் கேட்டு எல்லாரும் பரி காசமாகச் சிரித்தார்கள். இருந்தாலும் அதற்கு இணங்கினார்கள்.

விளக்குகள் அணைக்கப் பட்டன. எல்லாரும் கெட்டிலை ஒருவர் பின் ஒருவராகத் தொட்டார்கள். ஆனால் சேவல் கூவவே இல்லை.

எல்லோரும் தொட்டு முடிந்தானதும், பிராங்கி லின் விளக்குகளை ஏற்றினார். எல்லாரையும் தம் கைகளைக் காண்பிக்கும்படி சொன்னார். ஒருவர் கையைத் தவிர மற்ற எல்லார் கைகளிலும் கெட்டில் கரி படிந்திருந்தது.

கரி படாத கையையுடையவரை சோதனை போட்டதில் கடியாரம் அவரிடம் அகப்பட்டது. கெட் டிலைத் தொட்டால் சேவல் கூவி விடும் என்று பயந்து கொண்டு அவர் கெட்டிலைத் தொடவே இல்லை!

## சர்க்கார் உத்தியோகம்

யுத்தம் ஆரம்பித்த சமயத்தில் ஒரு பட்டதாரி தமக்குத் தெரிந்த ஒரு பெரிய சர்க்கார் அதிகாரியிடம் சென்று தமக்கு சர்க்காரில் ஒரு வேலை தரும் படி கேட்டார். அந்த அதிகாரியும் அவரைத் தமது காரியாலயத்துக்கு வரச் சொல்லி, ஒரு மேஜை நாற்காலியைப் போட்டு அதில் உட்கார்ந்து கொள்ளும் படி கூறினர்.

பல நாட்கள் ஆயின ; அந்தப் பட்டதாரிக்கு யாரும் வேலை கொடுக்கவில்லை. உட்கார்ந்து அவருக்கும் அலுத்துவிட்டது. பொழுதைப் போக்குவதற்கு அவர் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருப்பார். பத்திரிகைகளில் வெளியாகும் பகுத்தறிவுப் போட்டிகளைப் போட்டுப் பார்ப்பார். அப்படியும் பொழுது போகவில்லை.

ஒரு நாள் அந்த அதிகாரி பட்டதாரியைப் பார்க்க வந்தார். "வேலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா ?" என்று அவர் விசாரித்தார். பட்டதாரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "நீங்கள் கேட்கிறது புரியவேயில்லையே. சர்க்கார் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று ஆசையுடன் வந்தேன். தருகிறேன் என்று சொல்லி என்னை ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைத்தீர்கள். நானும் இத்தனை நாள் பிரதிதினமும் காத்திருந்தும் எனக்கு யாரும் வேலை ஒன்றும் கொடுக்கவில்லை. சும்மா அல்லவா

உட்கார்ந்திருக்கிறேன்?'' என்று வருத்தத்துடன் கூறினர்.

"சரியாய்ப் போச்சு! சர்க்கார் காரியாலயங்களில் நாங்கள் எல்லாம் பின்னே என்னத்தைச் செய்துகொண்டிருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்? உம் மாதிரிதான் சிவ சிவா என்று உட்கார்ந்திருக்கிறோம். மாதம் பிறந்ததும் சம்பளம் வாங்கிக் கொள்கிறோம். நீர் பார்த்துக் கொண்டிருப்பது சர்க்கார் உத்தியோகந்தானையா, கவலைப் படாதேயும்!'' என்று தேற்றினர் அதிகாரி.

## ஸ்திரீ முன்னேற்றம்

வட ஆப்ரிக்காவிலுள்ள அராபிய ஸ்திரீகளின் நிலைமை வெகு காலமாகவே மோசமாக இருந்து வந்திருக்கிறது. ஏதாவது பிரயாணம் செய்யவேண்டுமானல் புருஷன் உல்லாசமாக, கழுதைமீது ஏறிக் கொண்டு முன்னல் செல்வான். அவன் மனைவி, வீட்டுச்சாமான்களை எல்லாம் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு பின்னல் நடந்து வருவாள். யுத்தம் வந்ததின் காரணமாக, அராபிய ஸ்திரீகளின் இந்தப் பரிதாபகரமான நிலைமை மாறிவிட்டதாம். முன்போல் இப்பொழுது ஸ்திரீகள் பின்னல் நடந்து வருவதில்லையாம். அதற்குப் பதில், முன்னல் நடந்து செல்லுகிறார்களாம். ஏனெனில் நிலக்கண்ணிகள் ஏதாவது வழியிலிருந்து வெடித்தால் ஆபத்து அவர்களோடு போகட்டும் என்று தான்!

## அப்படிச் சொல்லு

முன்னொரு காலத்தில் ஒரு அரசர் தம்முடைய ஆண்குடிகள் எல்லோரையும் கூப்பிட்டு அனுப்பினார். கல்யாணமான புருஷர்கள் எத்தனைபேர் தங்களது மனைவியைக் கண்டு நடுங்குகிறார்கள் என்று கண்டுபிடிப்பதற்காக அவர்களை எல்லாம் தனியாக, தம் எதிரில் வந்து நிற்கச் சொன்னார். ஒரே ஒரு நோஞ்சல் ஆசாமியைத் தவிர, பாக்கி எல்லோரும் எதிரே வந்து நின்றார்கள். "நம் அரசாங்கத்தில் மனைவியைக் கண்டு நடுங்காத ஆசாமியும் ஒருவன் இருக்கிறானா?" என்று அரசர் சந்தோஷப்பட்டு, "உனக்குத் துணிச்சல் எப்படி வந்தது" என்று அவனைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அவன், "எந்தக் கும்பலிலும், கலந்து கொள்ளக் கூடாதென்று என் மனைவி எனக்குக் கடுமையான உத்திரவு போட்டிருக்கிறாள். அதனால் தான் நான் பயந்துகொண்டு, அந்தக் கும்பலோடு கும்பலாக வந்து நிற்கவில்லை" என்று சொன்னான்.

## இரண்டு ஸ்திரீகள் போதாது

ஒரு குக்கிராமத்தில் இரண்டே இரண்டு ஸ்திரீகள்தான் இருந்தனர். இரண்டு பேரும் எப்பொழுது பார்த்தாலும் பொழுது போகவில்லை, பொழுது போகவில்லை என்று குறை கூறிக்கொண்டு வந்தனர். "நீங்கள் தான் இரண்டு ஸ்திரீகள் இருக்

கிறீர்களே. ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு பொழுதைப் போக்கக்கூடாதா?" என்று ஒரு பெரியவர் அவர்களைப் பார்த்துக் கேட்டார். அதற்கு அவர்கள் சொன்னார்கள்: "இரண்டு ஸ்திரீகள் மாத்திரம் இருந்தால் பேசுவதற்கு என்ன விஷயம் இருக்கிறது? மூன்றாவது ஸ்திரீ ஒருவள் இருந்தால் அல்லவோ அவளைப் பற்றி நாங்கள் பேசமுடியும்?"

## பாடத் தெரியாது

ஒரு விகட வித்வான் விகடக் கச்சேரி செய்து கொண்டிருந்தார். ரயில் ஊதுவது போலவும், கோழிகள் கத்துவது போலவும், சிங்கம் கர்ஜிப்பது போலவும் எல்லாம் செய்து காண்பித்தார். கடைசியில் ஒரு பிரபல பாடகரைப் போலவே பாடிக் காண்பித்தார். இதைக் கண்டு வியப்புற்ற அவர் நண்பர்கள், "எப்பொழுது இவ்வளவு நன்றாகப் பாடக் கற்றுக் கொண்டீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் சொன்னார்; "எனக்குப் பாடத் தெரியாதே? அந்தப் பாடகர் எப்படிப் பாடுவார் என்றல்லவா விகடம் பண்ணிக் காண்பித்தேன்?"

## நாளைக்கு

அடிக்கடி கைமாற்றுக் கடன் கேட்கிறவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு வியாபாரி புது வழி கண்டு பிடித்து வைத்திருக்கிறார்.

கைமாற்றுக் கடன் கேட்கும் நண்பர் வியாபாரியைப் பார்த்து, "அவசரமாகப் பத்து ரூபாய் வேண்டியிருக்கிறது. இருந்தால் கொடேன். நாளைக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்பார்.

உடனே வியாபாரி "அதற்கென்ன? இந்த மாதிரி ஆத்திர அவசரத்திற்கென்றே பத்து ரூபாய் எடுத்து ஒதுக்கி வைத்திருக்கிறேன். அதைக் கொடுத்தால் போச்சு" என்று சொல்லிவிட்டு, தம் குமாஸ்தாவைக் கூப்பிட்டு, "அந்த பத்து ரூபாய் பெட்டியில் இருக்கிறதா?" என்று கேட்பார்.

"இல்லையே, நேற்றுத்தானே ஒருவருக்குக் கொடுத்தோம்? அதை அவர் நாளைத் திருப்பித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்."

"அப்படியானால் அவர் அதைத் திருப்பிக் கொடுத்ததும், இவருக்குக் கொடுக்க வேண்டும், தெரிந்ததா" என்பார்.

"நாளைக்குக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்லும் நண்பர்களுக்கு "நாளை" எப்பொழுது வரும் என்று கைமாற்று வாங்க வந்தவருக்குத் தெரியாதா? ஆகவே அவர் வெட்கி, தலை குனிந்து வீடு திரும்புவார்.

## மெய்யும் பொய்யும்

ஒரு நாள் பாதுஷா தமது ஆஸ்தான விகட கவியான பீர்பல்லைப் பார்த்து "மெய்க்கும், பொய்க்கும் உள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்

டார். "கண்ணுக்கும், காதுக்கும் உள்ள வித்தியாசம்தான்" என்று பீர்பல் பதில் சொன்னார். "எப்படி?" என்று பாதுஷா விசாரித்ததற்கு, "கண்ணால் கண்டது மெய், காதால் கேட்டது பொய்" என்று பீர்பல் விவரித்தார்.

## ராணுவ தந்திரம்

ஒரு சமயம் நெப்போலியன் ஓர் இடத்தில் எதிரியைப் போரில் முறியடித்தார். அவரது படைத் தலைவர் ஒரு யுத்த அறிக்கையைத் தயார் செய்து அவரிடம் கொண்டு வந்தார்.

"நெப்போலியன் மிகவும் சிறிய படையுடன் எதிரியின் பிரம்மாண்டமான படையை யுத்தத்தில் முறியடித்தார்" என்று அதில் எழுதியிருந்தது.

உடனே, நெப்போலியன் தமது படைத்தலைவரைப் பார்த்து, "என்னுடைய ராணுவ சாமர்த்தியத்தை வெளியிடும் உத்தேசத்துடன் ஒரு ரகசியத்தையும் இதில் வெளியிட்டிருக்கிறீர். அதாவது நம்மிடம் சிறிய படைதான் இருக்கிறது என்பதை. நம்மிடம் சிறிய படைதான் இருக்கிறது என்று நம் எதிரிகள் தெரிந்து கொள்ளக் கூடாது. நிஜத்தைச் சொல்லுவது ராணுவ தந்திரமல்ல! ஆகையால் பின் வருமாறு அறிக்கையை எழுதும் என்றார் :—

"நெப்போலியன் எதிரியைக் காட்டிலும் பன்மடங்கு பலமுள்ள படையுடன் சென்று எதிரியை முறியடித்தார்!"

## காரணம் என்ன ?

ஒரு நாள் டெல்லி பாதுஷாவான அக்பர் காட்டின் வழியாகப் போய்க் கொண்டிருக்கும் போது அபூர்வமாக யாரோ பாடிக்கொண்டிருப்பதைக் கேட்டார். அவர் அருகில் சென்று பார்த்த போது, பிரபல பாடகரான தான்ஸேனின் குரு அங்கே மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தார். அந்தப் பாட்டில் அப்படியே லயித்து விட்ட அக்பர், கோர்ட்டுக்குத் திரும்பியதும் தான்ஸேனைப் பார்த்து, "உங்கள் குரு பாடுவது போல் அத்தனை அழகாக உங்களால் ஏன் பாட முடியவில்லை ?" என்று கேட்டார். அதற்கு தான்ஸேன் பதில் சொன்னார் ; "நான் உங்கள் மகிமையைப் பற்றிப் பாடுகிறேன். ஆனால் குருவோ பகவானின் மகிமையைப் பற்றிப் பாடுகிறார். அதனால் தான் அவர் பாட்டு என் பாட்டை விட உயர்ந்ததாக இருக்கிறது."

## வைத்தியர்கள், ஜாக்கிரதை!

சமீபத்தில் தமது எண்பதாவது வயதில் காலஞ் சென்ற எச். ஜி. வெல்ஸ் பின்வருமாறு கூறுவாராம்.

"நான் வெகு காலம் வாழ வேண்டுமென்று தான் எல்லோரும் விரும்புகின்றனர். ஆனால் நான் உயிரோடு இருப்பது என்னமோ என் டாக்டருக்கு மட்டும் பிடிக்கவில்லை. இரண்டு வருஷங்களுக்கு

முன்னர், அவர் என்னைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, நான் இன்னும் சில நாள் தான் இருப்பேன் என்று சொன்னார் நான் சாகாமல் இருப்பது தம் வைத்திய அனுபவத்தையே அவமதிப்பது போலாகும் என்று அவர் கருதுகிறார்."

## சீனப் பழமொழி

ஒரு வருஷம் கழித்துப் பலன் வேண்டுமென்றால் தானியங்களைப் பயிரிடு. பத்து வருஷம் கழித்துப் பலன் வேண்டுமென்றால் மரங்களைப் பயிரிடு. நூறு வருஷம் கழித்துப் பலன் வேண்டுமென்றால் மனிதர்களைப் பயிரிடு."

## பகிரங்க ரகசியம்

அன்றுதான் சென்னை சட்டசபைத் தேர்தல் தினம். வோட்டுப்போட்டுவிட்டு வாக்காளர்கள் பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

"யார் ஜயிப்பார்களோ, என்னவோ தெரியவில்லை. தேர்தல் ரகசியமாக நடப்பது ஒரு விதத்தில் அசௌகரியமாய்த் தானிருக்கிறது" என்றார் ஒரு பிரயாணி. "தேர்தல் ரகசியமாக நடப்பதாக நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்" என்றார் மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவர்.

"ஏன், எப்படி?" என்று எல்லோரும் கேட்டார்கள்.

"காலையில் நான் வோட்டுப்போடப் போன

போது, எத்தனை பேர் வோட்டுப் போட்டிருக்கிறார்கள், எத்தனை வோட் சேர்ந்திருக்கிறது என்று எனக்குத் தெரிந்து விட்டது. போலிங் அதிகாரியே எனக்கு ரகசியத்தைச் சொல்லிவிட்டார்."

"ஐயோ! போலிங் அதிகாரியா? எப்படி அவர் இந்த விஷயங்களையெல்லாம் சொல்லலாம்?" என்று திடுக்கிட்டுக் கேட்டார்கள் பக்கத்திலுள்ளவர்கள்.

"ஆமாம்; போலிங் ஸ்டேஷனில் முதன் முதலில் வோட் போட்டவன் நான்தான் என்று அந்த அதிகாரி சொன்னார்!" என்றார் அந்த ஆசாமி.

## மார்க் ட்வெயின்

பிரபல ஹாஸ்ய எழுத்தாளரான மார்க் ட்வெயின் ஒரு தடவை ஒரு சித்திரக்காரரைப் பார்க்கப் போனார். அவர் வரைந்திருந்த ஒரு படத்தைப் பார்த்து, "இந்த மூலையில் மேகம் போட்டிருப்பது சரியில்லை" என்று அதை அழிப்பதற்குப் போல் கையைப் பக்கத்தில் கொண்டுபோனார். அதைக் கண்ட சித்திரக்காரர் பயந்து, "தொடாதீர். இன்னும் வர்ணம் காயவில்லை" என்றார். அதற்கு மார்க் ட்வெயின், "பரவாயில்லை. கையை அலம்பி விட்டால் போகிறது" என்றார்.

# பட்டகாலிலே படும்

உலகில் அநேகர் ஏதாவது கஷ்டம் வந்தால் தங்களைப்போல் கஷ்டப்படுகிறவர்கள் வேறு யாரும் கிடையாது என்று நினைத்துக் கஷ்டப்படுகிறார்கள். பின்னால் வரும் இந்த அமெரிக்கரைப் போன்று உங்கள் யாருக்காவது கஷ்டம் வந்திருக்கிறதா என்று நீங்களே சொல்லுங்கள்.

இந்த அமெரிக்கர் சிறுவயதில் ஒரு சுரங்க விபத்தில் புதைபட்டு பிழைத்தார். சில வருஷங் களுக் கெல்லாம் ஒரு வெடி விபத்தில் ஒரு காலையும் ஒரு கண்ணையும் இழந்தார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் 50 அடி உயரத்தி லிருந்து கீழே விழுந்து எலும்புகளை நொறுக்கிக் கொண்டார். உடம்பு சொஸ்தமான கொஞ்ச நாளைக்கெல்லாம் ஒரு குதிரையினால் உதைக்கப் பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார். தம் எண்ப தாவது வயதில் நிமோனியா ஜுரத்தினால் அவஸ்தைப்பட்டார். 82-வது வயதில் ஒரு குதிரை யினால் மிதியுண்டார். 84-வது வயதில் ஒரு மோட் டார் வண்டி இவர் மீது ஏறிவிட்டது. வாழ்க்கையில் மூன்று தடவை மின்னலினால் தாக்குண்டிருக்கிறார். இனிமேல் ஒருவிதக் கஷ்டமும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில் கடைசியாக இரண்டாவது காலையும் ஒடித்துக் கொண்டு விட்டார்.

## கேள்வியும் பதிலும்

ஒரு ஐரிஷ்காரன் சோவியத்து பிரஜையாக மாற விரும்பினுன். அப்பொழுது சோவியத் அதிகாரிகள் அவனைக் கேட்ட கேள்விகளும் அவன் அளித்த பதில்களும் பின்வருமாறு.

கேள்வி: உன்னிடம் லட்சம் டாலர் இருந்தால் அதில் பாதியை சோவியத் அரசாங்கத்துக்குக் கொடுப்பாயா ?

பதில்: கொடுப்பேன்.

கேள்வி: உன்னிடம் ஆயிரம் ஏக்கர் நிலம் இருந்தால் அதில் பாதியை சோவியத் அரசாங்கத்துக்குக் கொடுப்பாயா ?

பதில்: கொடுப்பேன்.

கேள்வி: உனக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தால் எல்லாரையும் சோவியத் இரசாங்கத்துக்குக் கொடுப்பாயா ?

பதில்: கொடுப்பேன்.

கேள்வி: உன்னிடம் இரண்டு சட்டைகள் இருந்தால் ஒரு சட்டையை சோவியத் அரசாங்கத்துக்குக் கொடுப்பாயா ?

பதில்: மாட்டேன்.

கேள்வி: ஏன் ?

பதில்: என்னிடம் இரண்டு சட்டைகள் இருக்கின்றன.

## உங்கள் வயது

எல்லாரும் வயதைக் கொண்டுதான் யுவரா, மத்திம வயதுடையவரா, அல்லது கிழவரா என்று நிர்ணயிக்கிறார்கள். இது தவறு என்றும் இது விஷயத்தை பின் கண்டபடி தான் நிர்ணயிக்க வேண்டும் என்றும் ஒரு அறிஞர் கூறுகிறார்.

ஸ்திரீயினால் வாழ்க்கையை சந்தோஷமாகவோ, அல்லது துக்ககரமாகவோ ஆக்க முடியுமானால் அந்த மனிதன் வாலிபன். ஸ்திரீயினால் வாழ்க்கையை சந்தோஷமாக்க முடியும், ஆனால் துக்ககரமாக்க முடியாது என்றால் அந்த மனிதர் மத்திம வயதுடையவர். ஸ்திரீயினால் வாழ்க்கையை சந்தோஷகரமாக்கவும் முடியாது துக்ககரமாக்கவும் முடியாது என்றால் அவர் கிழவர்.

## காந்தியும் கடவுளும்

மகாத்மா காந்தி முதல் முதலில் அஹிம்சையைப் பற்றி பேசியபொழுது, சர்தார் வல்லபாய் படேல், "அஹிம்சையாம், மண்ணாங்கட்டியாம்! இது சுத்தப் பித்துக்குளியாக இருக்கும் போலிருக்கிறதே" என்று கேலி செய்தார்.

சில வருஷங்கள் கழிந்தது. ஒரு நாள் கடவுள் இதே படேலின் வீட்டுக்கு வந்தார். அவர் படேலின் எதிரில் வந்து, "ஐயா! நான்தான் கடவுள்!" என்றார்.

அதற்கு சர்தார் படேல், " நீர் மகாத்மா காந்தியிடம் சென்று அவரை இங்கே அழைத்துக் கொண்டு வாரும். அவர் நீர் கடவுள்தான் என்று என்னிடம் சொன்னலொழிய நான் உம்மைக் கடவுள் என்று அங்கீகரிக்க மாட்டேன் " என்ருர்!

## கோர்ட்டுக்குப் போகாதே

கோர்ட் ஒரு எலிப் பொறியைப் போன்றது. உள்ளே நுழைவது எளிது. ஆனல் வெளியே வருவது கடினம்.

—பால்பர்

கோர்ட்டுக்குப் போவதனல் என்ன ஏற்படும் என்று ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனல் ஒரு விஷயம் நிச்சயமாக ஏற்படும். அதாவது செலவு ஏற்படும்.

—பட்லர்

சட்டங்கள் வலைத் துணியைப் போன்றவை. ஏழை, எளியவர்கள் அதில் ஊடே நுழைந்து தப்பித்துக் கொள்வார்கள். பணக்காரர்கள் வலையை முறித்துக் கொண்டு வெளியே வந்து விடுவார்கள். நடுவாந்தரத்தில் உள்ளவர்கள் தான் அகப்பட்டுக்கொண்டு விழிப்பார்கள்.

—சீனப் பழமொழி

எதிர், எதிர்க் கட்சிகளில் வாதாடும் வக்கீல்கள் கத்திரிக் கோலின் இரு பக்கங்களைப் போன்றவர்

கள். அவர்கள் ஒருவரை யொருவர் வெட்டிக் கொள்ள மாட்டார்கள் ; ஆனால் நடுவில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் இரண்டு பக்கக் கட்சிக்காரர் களையும் வெட்டி விடுவார்கள்.

—பர்னர்ட் ஷா

கோர்ட்டுகளில் கேஸ் ஜயித்தாலும் பண நஷ்டம், தோற்றாலும் பண நஷ்டம்.

—வால்டேர்

## ஸ்திரீகள் தவறு

புருஷர்கள் ஏதாவது தவறு பண்ணினால் தவறு பண்ணின நபரைக் குறிப்பிட்டு இன்னார் இத்தனை அசடாய் இருக்கிறாரே என்று சொல்வார்கள். ஆனால் ஸ்திரீகள் ஏதாவது தவறு பண்ணினால் இந்த ஸ்திரீகளே அசடுகள்தான் என்று எல்லா ஸ்திரீகளையுமே பொதுப்படையாகத் தூஷிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

## தென்னாப்பிரிக்காவில்

தென்னாப்பிரிக்காவில் யாராவது ஒரு யுவன் ஒரு யுவதியைப் பார்க்க வந்தால் அவள் உடனே ஒரு மெழுகு வத்தியை ஏற்றி வைப்பாளாம். மெழுகு வத்தி அணையுமட்டும் யுவன் யுவதியோடு பேசிக் கொண்டிருக்கலாம். தனக்குப் பிடித்த யுவனாக இருந்தால் யுவதி நீளமான மெழுகு வத்தியாகப் பார்த்து ஏற்றி வைப்பாள். பிடிக்காதவனாக

இருந்தால் சின்ன மெழுகு வத்தியாகப் பார்த்து ஏற்றி வைப்பாள்.

## நஷ்ட ஈடு

இயந்திரசாலைகளில் வேலைசெய்யும் பொழுது கையோ காலோ உடைந்து விட்டால் அதற்கு நஷ்ட ஈடு கொடுப்பதுண்டு. ஆனால் எவ்வளவு கொடுப்பது என்பதைப் பற்றி அடிக்கடி தகராறு எழுகிறது. ஸ்வீடன் தேசத்தில் இத்தகைய தகராறு ஒன்றும் கிடையாது. சில நிபுணர்கள் கொண்ட கமிட்டி ஒன்று பின்வருமாறு வருஷ பென்ஷன் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது.

| | |
|---|---|
| காலோ, புஜமோ போனால் | .... 75 பவுன். |
| பாதமோ அல்லது கையோ போனால் | .... 50 பவுன். |
| காது செவிடானால் | .... 50 பவுன். |
| ஒரு கண் போனால் | .... 25 பவுன். |
| மூன்று விரல்கள் போனால் | .... 40 பவுன். |
| கட்டை விரல் போனால் | .... 25 பவுன். |
| ஆள்காட்டிவிரல் போனால் | .... 14 பவுன். |

வருஷத்திற்கு 100 பவுனுக்கு மேல் யாருக்கும் பென்ஷன் கிடையாது. இதைப் பெற வேண்டுமானால் இரண்டு கண்ணோ, இரண்டு காலோ அல்லது இரண்டு புஜங்களோ போயிருக்க வேண்டும்.

## உபதேச மொழிகள்

தன் மருந்துகளின் உதவாக் கரைத் தன்மையை அறிந்தவன் தான் சிறந்த வைத்தியன்.

பக்கத்து வீட்டுக்காரனை நேசி. ஆனால் அதற்காக உன் வீட்டுக்கும் அவன் வீட்டுக்கும் இடையில் உள்ள வேலியை எடுத்து விடாதே.

காதல் இல்லாத கல்யாணம் கல்யாணம் இல்லாத காதலில் முடியும்.

பணம் உள்ளவனுக்கு கருமித்தனம் அவசியமில்லை. கருமித்தனம் உள்ளவனுக்குப் பணம் அவசியமில்லை.

சொஸ்தப் படுத்துவது கடவுள். பணம் வாங்கிக் கொள்வது வைத்தியர்.

அவசியமில்லாத பொருள்களை வாங்க ஆரம்பிக்கிறவன் சீக்கிரமே அவசியமான பொருள்களை வாங்க முடியாமல் தவிப்பான்.

விரோதிக்குக் கடன் கொடு. அவன் நண்பனாக மாறி விடுவான். நண்பனுக்குக் கடன் கொடு. அவன் விரோதியாக மாறிவிடுவான்.

உன் ரகசியம் உன் விரோதிக்கு எட்டக் கூடாது என்றால் உன் நண்பனுக்கும் எட்டக் கூடாது.

—பெஞ்சமின் பிராங்கிளின்.

## பண விஷயம்

பணம் சம்பாதிக்க முயற்சித்தால் பணத்தாசை பிடித்தவன். பணத்தை சேமித்து வைத்தால் முதலாளி. பணத்தைத் தாராளமாக செலவழித்தால் ஊதாரி. பணம் சம்பாதிக்கத் தெரியாவிட்டால் பைத்தியக்காரன். பணத்தைச் சிரமமின்றி சம்பாதித்தால் அயோக்கியன். கஷ்டப்பட்டு சம்பாதித்து பணத்தை சேமித்து வைத்தால் முட்டாள்.

டைம்ஸ் ஆப் இந்தியா.

## ப்ராஹா

ப்ராஹா என்னும் நகரம் முதலில் ஆஸ்திரியாவில் இருந்தது. பிறகு அது ஸெக்கோஸ்லோவேக்கியா என்ற நாட்டின் தலைநகராக மாறிற்று. ஸெக்கோஸ்லோவேக்கியாவை ஹிட்லர் கைப்பற்றியதும் ப்ராஹாவும் ஒரு ஜெர்மென் நகரம் ஆயிற்று. இதைக் குறித்து வேடிக்கையாக பின் வரும் கதை சொல்லப்படுகிறது :—

ப்ராஹாவில் வாழ்ந்த ஒரு மனிதனின் கல்லறைக் கல்லில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறதாம்.

“ இதில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஜோஸப் ஆஸ்டிரியாவில் பிறந்து ஸெக்கோஸ்லோவேக்கியாவில் வாழ்ந்து ஜெர்மனியில் இறந்தான். ஆனால் தன் சொந்த ஊராகிய ப்ராஹாவை விட்டு எங்கும் போகவே இல்லை.”

## கண்ணைக் கட்டி காட்டில் விட்டால்

உங்களைக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் நீங்கள் திண்டாடிப் போய் விடுவீர்கள். வழியிலுள்ள மரங்களின் மீதும் முட்களின் மீதும் மோதிக் கொள்வீர்கள். ஆனால் கண்ணைத் திறந்துவிட்டு காதைக் கட்டிக் காட்டில் விட்டால் நீங்கள் கவலையே படமாட்டீர்கள். அதனால் உங்களுக்கு அதிகக் கஷ்டமோ இடைஞ்சலோ ஏற்படவும் செய்யாது.

கடவுள் சிருஷ்டியில் இதற்கு நேர் எதிரிடையான ஜந்து ஒன்று இருக்கிறது. அதன் கண்ணைக் கட்டி எங்கு விட்டாலும் சரி, அது கவலைப்படாது. வெகு அனுயாசமாக ஒன்றிலும் மோதிக்கொள்ளாமல் செல்லும். ஆனால் இவற்றின் காதை அடைத்துவிட்டீர்களோ இவை வழி தெரியாமல் திக்குமுக்காடி திண்டாடிப் போய்விடும். இந்த ஜந்துகள் கண்ணால் பார்ப்பதைவிட காதால் பார்க்கின்றன என்று சொன்னாலும் மிகை ஆகாது.

இந்த ஜந்துக்கள் எவை என்று தெரியுமா? பாழடைந்த கோவில்களையும் இருட்டுப் பொந்துகளையும் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டிருக்கின்றனவே, வௌவால்கள், அவைதான்.

காதைக்கொண்டு வௌவால்கள் எப்படிப் பார்க்கின்றன? வௌவால் எப்பொழுது பார்த்தாலும் கிரீச் என்று சப்தம் போட்டுக்கொண்டே இருக்கிறது. ஆனல் அந்த சப்தம் நம் காதுக்குக்

கேட்பதில்லை. சப்த அலையின் வேகம் குறிப்பிட்ட வேகத்துக்குமேல் இருந்தால் அது நம் காதில் விழுவதில்லை. இந்த சப்தம் பக்கத்திலுள்ள பொருள்களின் மேல்பட்டுப் பிரதி த்வனி உண்டாகிறது அல்லவா? அதைக்கொண்டு சுற்றிலும் உள்ள பொருள்கள் சமீபத்தில் உள்ளனவா அல்லது தூரத்தில் உள்ளனவா என்று வெளவால் கண்ணைத் திறக்காமலே தெரிந்து கொண்டு விடுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா ?

1. உலகத்தில் ஒவ்வொரு வாரமும் 23½கோடி ஜனங்கள் சினிமா பார்க்கிறார்கள்.

2. டொரொண்டோவில் பாதசாரிகளும் மோட்டார் ஓட்டிகளைப்போல தாங்கள் எந்தப் பக்கம் திரும்பிப்போகிறோம் என்பதற்கு கைகாட்ட வேண்டும்.

3. பிரிட்டனில் ஜலதோஷம் பிடிப்பதினால் 4 கோடி வேலை நாட்கள் வீண் ஆகிறது.

4. பின்னால் வரும் வண்டிகளை உட்கார்ந்தபடியே கவனிப்பதற்காக மோட்டார் வண்டிகளில் கண்ணாடிகள் பொருத்தியிருக்கிறார்கள் அல்லவா? அதைப்போலவே 2,000 வருஷங்களுக்கு முன்னால் உள்ள இரதங்களிலும் பொருத்தி இருந்தார்களாம்.

## யாருக்கு நாக்கு நீளம்

காப்பியில் கொஞ்சம் சர்க்கரை அதிகமாக வோ அல்லது குறைவாகவோ போய் அதைநாம் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டால் நாக்கு என்ன நீளம் என்று நம்மைப் பழிக்கிறார்கள். ஆனால் இது விஷயத்தில் நாம் ஈக்களுடன் போட்டிபோட முடி யாது. என்னதான் நாக்கு நீளக்காரராக இருந்தா லும் ஒரு பங்கு சர்க்கரையுடன் இருநூறு பங்குக்கு மேற்பட்ட ஜலம் கலந்திருந்தால் நம்மால் கண்டு பிடிக்க முடியாது. ஆனால் 40,000 பங்கு ஜலத்தில் ஒரு பங்கு சர்க்கரை கலந்திருந்தால் கூட ஈக்கள் கண்டு பிடித்து விடுமாம். பட்டுப் பூச்சிகள் 3,00,000 பங்கு ஜலத்தில் ஒரு பங்கு சர்க்கரை கலந்தால் கூட கண்டு பிடித்து விடுமாம். இப்பொழுது நீங்களே சொல்லுங்கள், யாருக்கு நாக்கு நீளம் என்று?

## கைது செய்யாதீர்கள்

ஒரு கிராமத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக் குள், தலைவிரிகோலமாக ஒரு நாட்டுப்புரத்து ஸ்திரீ ஓடிவந்தாள்.

"ஏன்? என்ன விசேஷம்?" என்று கேட்டார் போலீஸ்காரர்.

"நான் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது அந்த மனிதன் ஓடிவந்து தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளிக் கம்பால் அடித்தான்!" என்று

அவள் முறையிட்டு, அவ்வாறு செய்த ஆசாமியின் அங்க அடையாளங்களையும் சொன்னாள்.

"கவலைப்படாதே! நீ இவ்வளவு தூரம் அடையாளம் சொன்ன பிறகு, அந்த ஆசாமியைக் கண்டு பிடிப்பது எங்களுக்குப் பிரமாதமில்லை. ஒரு நொடியில் அவனைக் கைது செய்து தண்டிக்கிறோம்" என்றார் போலீஸ்காரர்.

"ஐயா, ஐயா! அவரைக் கைது செய்யாதீர்கள்! அவரைக் கண்டு பிடித்து என்னிடம் சேர்ப்பித்தால் போதும். ஏனெனில், அவர்தான் என் கணவன்" என்று கெஞ்சினாள் அந்தப் பெண்!

## மன்னிக்கவேண்டும்

ஒருவர் காப்பி சாப்பிடச் சென்றார். காப்பி வந்ததும் காப்பிக்குக் கொஞ்சம் சர்க்கரை போட்டுக் கொள்ள விரும்பினார். கப்போ ரொம்பவும் சூடாயிருந்தது. சர்க்கரையைப் போட்டுக் கலக்குவதற்கு ஸ்பூன் கொண்டு வைக்காததைப் பார்த்த அந்த மனிதர், கோபமாக ஹோட்டல் காரரைப் பார்த்து, "ஏனையா, கையை விட்டுக் கலக்கிச் சாப்பிடுகிறதா? காப்பி சூடாயிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியவில்லையா?" என்றார்.

"மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு ஹோட்டல் ஸர்வர் உள்ளே சென்றான். சிறிது நேரங் கழித்துத் திரும்பி வந்தான். ஆனால் அவன்

ஸ்பூன் கொண்டு வரவில்லை. அதற்குப் பதிலாக ஒரு கப் காப்பியைக் கொண்டு வந்து,

"காப்பி சூடாயிருக்கிறதென்றீர்களே. ஆறின காபி கொண்டுவந்து விட்டேன்; சாப்பிடுங்கள்!" என்றான்.

## வேறொன்றுமில்லை

லிஸ்டர் பிரபு என்று சீமையில் ஒரு பிரபல டாக்டர் இருந்தார். ஒருநாள் இரவு தனவந்தரான ஒரு நோயாளிக்கு உடம்பு குணமில்லை யென்றும், உடனே புறப்பட்டு வரும்படியும் லிஸ்டர் பிரபுவுக்கு டெலிபோன் செய்தி வந்தது. டாக்டரும் புறப்பட்டுச் சென்றார்.

டாக்டர் நோயாளியைப் பரீட்சை செய்ததும், அவரைப் பார்த்து, "நீங்கள் உங்கள் உயிலை எழுதி வைத்து விட்டீர்களா?" என்று கேட்டார். "இல்லை" என்று பயப்பிராந்தியுடன் பதிலளித்தார் நோயாளி.

"இல்லையென்றால், உடனே வக்கீல்களுக்கும் உங்கள் இரண்டு குமாரர்களுக்கும் சொல்லியனுப்புங்கள்" என்றார் டாக்டர்.

"அப்படியானால் நான் செத்துப் போய் விடுவேனா? பிழைக்க மாட்டேனா?" என்று பரிதாபமாகக் கேட்டார் நோயாளி.

"இல்லை, இல்லை; இந்த ராத்திரியில் ஒரு உபயோகமற்ற வேலைக்காக நான் மட்டும் தூக்கத்

தைக் கெடுத்துக் கொண்டு ஓடிவந்தேன் என்று இருக்கக் கூடாது. இன்னும் இரண்டு பேருக்காவது என் கதி ஏற்பட்டால்தான் எனக்குக் கொஞ்சம் திருப்தியாயிருக்கும்" என்றார் டாக்டர்!

## செவிடு

செவிடாக இருந்த ஒருவர் ஒரு காது வைத்தியரிடம் சென்று வைத்தியம் செய்து கொண்டார். சிகிச்சை முடிந்ததும் வைத்தியருக்குத் தாம் என்ன பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்.

வைத்தியர்:—ஐம்பது ரூபாய்.

நோயாளி:—என்ன எழுபது ரூபாயா?

வைத்தியர்:—இல்லை நூறு ரூபாய்!

## களைப்பு

மிகவும் களைத்துப் போன ஒரு ஸோல்ஜர் ஒரு சலூனுக்குள் நுழைந்து அங்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்தான்.

"முகக்ஷவரமா, கிராப்பா?" என்று அங்கிருந்த ஆள் கேட்டான்.

"முகக்ஷவரம்" என்றான் ஸோல்ஜர்.

"அப்படியானால் இன்னும் கொஞ்சம் நிமிர்ந்து உட்காருங்கள்" என்றான் அங்கிருந்த ஆள்.

நிமிர்ந்து உட்காரக் கூட முடியாமல் ஸோல்ஜருக்கு அத்தனை அசதி!

"சரி, கிராப்பே பண்ணு" என்றான்.

## ஒரு வேடிக்கை

உங்கள் வீட்டு நம்பரை இரண்டால் பெருக்கி ஐந்தைக் கூட்டுங்கள். இந்தத் தொகையை ஐம்பதால் பெருக்கி, அத்துடன் இந்த வருஷத்தை (1947)க் கூட்டுங்கள். இத்துடன் 365க் கூட்டுங்கள். இந்தத் தொகையிலிருந்து நீங்கள் பிறந்த வருஷத்தையும், 615யும் கழித்துவிடுங்கள். மீதி வரும் விடையில் முதல் பகுதி வீட்டு நம்பர். பின் பகுதி உங்களுடைய தற்போதைய வயது.

## முதல் காரியம்

"உனக்குத் திடீரென்று லட்சம் ரூபாய் கிடைக்கிறது என்று வைத்துக்கொள். என்ன பண்ணுவாய்?"

"சரியாக இருக்கிறதா என்று முதலில் எண்ணிப் பார்ப்பேன்"

## ஞாயிற்றுக்கிழமை

"இந்த மாதிரி தினம் பணத்துக்கு வந்து அலைகிறது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது."

"ஞாயிற்றுக்கிழமை உங்களுக்கு ஒழியுமா?"

"ஒழியும்."

"அப்படியானல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வந்து விட்டுப் போங்கள்."

## நன்கொடை

ஒரு பரதேசிக் கிழவன் தெருவில் நின்று கொண்டிருந்த சில வாலிபர்களை அணுகி, "ஐயா! என்னிடம் ஒரு அணா இருக்கிறது. நீங்கள் தயவு செய்து இரண்டு அணா கொடுத்தால் என் ராத்திரிப் பாட்டைத் தீர்த்துக் கொள்வேன்!" என்று கூறினான். "எங்களிடம் சில்லறை இல்லை. அதோ, அங்கே பேசிக்கொண்டிருக்கிறாரே ஒரு அம்மாள் அவர் உனக்கு ஏதாவது ஒத்தாசை செயவார்!" என்று அவர்கள் சொன்னார்கள்.

சிறிது நேரம் கழித்துக் கிழவன் வந்த வழியே திரும்பினான். "அந்த அம்மாள், உனக்கு உதவி செய்தாரா" என்று வாலிபர்கள் கேட்டார்கள். கிழவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "இல்லை, அந்த அம்மாள் இ. தே. ரா. நிதி வசூலித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு என்னிடமிருந்த ஒரு அணாவைக் கொடுத்துவிட்டு வந்தேன்!" என்றான்.

## அசகாய சூரன்

ஒரு கனவான் புதிதாக வந்த வேலைக்காரனின் சாமர்த்தியத்தைப் பரிசோதிக்க எண்ணி, "தோட்டத்தில் ஒரு பட்டுப்போன மரம் இருக்கிறது, அதை வெட்டி சீக்கிரம் விறகு உடைத்துப்போடு!" என்று கட்டளையிட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் நாலு வண்டி விறகு வெட்டிப்போட்டு விட்

டான். "தோட்டத்திற்கு கொஞ்சம் ஜலம் இறை!" என்று கட்டளையிட்டார். அரை மணிநேரம் கழித்துப் பார்த்தால் தோட்டம் ஜலத்தில் மிதந்து கொண்டிருந்தது.

பிறகு ஒரு கூடை நிறையக் கத்தரிக்காய்களை அவன் கையில் கொடுத்து, "இந்தக் கூடையிலுள்ள நல்ல கத்தரிக்காய்களை எடுத்து ஒரு பக்கத்தில் வை. சொத்தைக் காய்களைத் தூர எறிந்துவிடு" என்று கட்டளையிட்டார்.

வெகு நேரம் கழித்து, அவர் திரும்பி வந்தபோது வேலைக்காரன் தலைவிரிகோலமாக உட்கார்ந்திருந்தான். "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்றார் கனவான். "எஜமான்! எந்த முரட்டு வேலை கொடுத்தாலும் நான் நொடியில் செய்வேன். ஆனால் இது நல்லதா, சொத்தையா என்று நாலைந்து கத்தரிக்காய்களை முடிவு செய்வதற்குள் என் மூளை குழம்பி விட்டது!" என்றான்.

## உயிரை விடமாட்டேன்

அமெரிக்காவில் ஒரு வாலிபன் ராணுவத்தில் சேரும் உத்தேசத்துடன் ஒரு ராணுவ அதிகாரியைப் பார்க்கச் சென்றான். அந்த அதிகாரி இவன் தேசபக்தியைக் கண்டு மிகவும் சந்தோஷித்து, "அப்பா! நீ தேசத்துக்காக உயிரைவிடச் சித்தமாயிருக்கிறாயா?" என்று கேட்டார்.

"நான் தேசத்துக்காக உயிரை விடமாட்டேன்!" என்று பதிலளித்தான் அந்த வாலிபன்.

அந்த அதிகாரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. "அப்படியானல் நீ எதற்காக ராணுவத்தில் சேருகிருய்?" என்று கோபத்துடன் கேட்டார்.

"தங்கள் தேசத்துக்காக பல ஜப்பானியர்களை உயிரை விடும்படி செய்வதற்காகவே நான் ராணுவத்தில் சேருகிறேன்" என்று கூறினன் வாலிபன்!

## சீனுவில்

சீனுவில் விருந்தாளி வந்தால் வீட்டுக்காரர் விருந்தாளியைப் பார்த்து, "தாங்கள் என் வீட்டைத் தேடிக் கொண்டு வர என் வீடு என்ன பாக்கியம் செய்ததோ?" என்பார். உடனே விருந்தாளி, "தங்கள் வாசற்படியில் கால் எடுத்து வைக்க என் கால்களுக்கு அருகதையில்லை" என்பார். அதற்கு வீட்டுக்காரர், "என் வாசற்படி தங்கத்தாலானுல் கூட தங்கள் செருப்புப் பட அதற்கு யோக்யதையில்லை" என்று பதில் அளிப்பார்.

## மனிதனும் இயந்திரமும்

சாதாரண மனிதர்கள் 50 பேர் செய்யும் வேலையை ஒரு இயந்திரம் செய்து விடும். ஆனுல் ஒரு மேதை செய்யக் கூடிய வேலையை எத்தனை இயந்திரங்கள் வந்தாலும் செய்ய முடியாது.

## சர்க்கரை

குழந்தைகள் சர்க்கரை திருடித் தின்றால் தாயார்கள் கொள்ளும் கோபத்துக்குக் கணக்குக் கிடையாது. சர்க்கரை திருடின கையை நறுக் கென்று கிள்ளுவார்கள். அல்லது குழந்தைகளின் முதுகில் பட், பட் என்று வீறுவார்கள். ஆனால் இதே தாயார்கள் நீயூஜீலந்து டாக்டர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டால், சர்க் கரை திருடும் குழந்தைகளை அடிப்பதற்குப் பதில், இன்னும் இரண்டு ஸ்பூன் சர்க்கரை அவர்கள் வாயில் அள்ளிப் போட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

நீயூஜீலந்து டாக்டர்கள் அங்குள்ள சிறைக் கைதிகளை பரிசோதித்துப் பார்த்து விட்டு, அவர்கள் உடம்பில் சர்க்கரை சத்து குறைவாக இருப்பதால் தான் அவர்கள் குற்றவாளிகளாக மாறினார்கள் என்று அபிப்பிராயப் படுகிறார்கள். சர்க்கரை அதிகம் சாப்பிட்டால் மூர்க்கத் தனம் குறையும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

## சைக்கிள் கைதி

இரண்டாவது மகாயுத்தம் நடந்து கொண் டிருந்த காலையில் நேச தேச யுத்தக் கைதி ஒருவன் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிவந்தான். நாஸிகள் அவன் தப்பியதைப் பார்த்து விட்டு,

பின்னல் வெகு வேகமாக ஓடி வந்தார்கள். கைதிக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லே. வழியில், சுவர் ஓரமாக ஒரு சைக்கிள் சாத்தி வைக்கப் பட்டிருந்ததைப் பார்த்தான். அவ்வளவுதான், அந்த சைக்கிளின் மீது தாவினன். வெகு வேகமாக பெடல் பண்ணிக் கொண்டு போய் நாஸிகளிடமிருந்து தப்பித்தான். ஆனல் நாஸிகள் மறைந்ததும் அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. "நமக்கு சைக்கிள் விடவே தெரியாதே, எப்படி இவ்வளவு தூரம் சைக்கிளில் வந்தோம்?" என்று நினைத்தான். அவன் அப்படி நினைத்தது தான் தாமதம், தொப்பென்று சைக்கிளிலிருந்து கீழே விழுந்தான்.

## 20 வருஷ அனுபவம்

இருபது வருஷ அனுபவம் உள்ள வாத்தியாருக்குப் பிரமோஷன் கொடுக்காமல் அவரை விடக் குறைந்த அனுபவம் உள்ள ஒருவருக்குப் பிரமோஷன் கொடுத்தார்கள். இதைக் கண்டு வாத்தியார் கோபம் கொண்டு, "என் இருபது வருஷ அனுபவத்தைக் கவனிக்காமல் இப்படி செய்து விட்டீர்களே" என்று சொன்னர். அதற்கு ஹெட் மாஸ்டர் சொன்னர், "உங்களுக்கு இருபது வருஷ அனுபவம் எங்கே ஆச்சு? ஒரு வருஷ அனுபவம் தான் இருபது தடவை ஆயிருக்கிறது" என்று.

## எழுத்தாளர், பாவம்

தாம் எழுதிய கதை ஒன்றை எடுத்துக்கொண்டு எழுத்தாளர் ஒருவர் ஒரு பத்திரிகாசிரியரை நேரில் பார்ப்பதற்கு வந்தார். எழுத்தாளரின் கையெழுத்து பத்திரிகாசிரியருக்குப் புரியவே இல்லை.

" இப்படி எழுதினல் நான் எப்படிப் படித்துப் பார்ப்பது? டைப் அடித்துக் கொண்டு வரக் கூடாதா? " என்று பத்திரிகாசிரியர் கேட்டார். அதற்கு எழுத்தாளர் " எனக்கு டைப் அடிக்கத் தெரியாததால் தான் கதை எழுதும் வேலையில் இறங்கினேன்! இல்லாவிடில் எங்கேயாவது குமாஸ்தாவாகப் போயிருக்க மாட்டேனு!" என்று கேட்டார்.

## கண் காணிப்பு

தென் அமெரிக்காவிலுள்ள சில்லி ஆர்ஜெண்டின தேசங்களின் நடு எல்லையில் ஏசுகிறிஸ்துவின் சிலை ஒன்று இருக்கிறது. இந்த சிலை உள்ள வரையில் இந்த இரு தேசங்களும் சிநேக பாவமாக இருக்கவேண்டுமென்பது அவர்களுக்குள் உடன்படிக்கை. ஆனல் இந்தச்சிலை நாட்டப்பட்டதே இவ்விருதேசங்களுக்கு மிடையே ஒரு சிறு பூசலுக்கு காரணமாயிருந்தது. சிலையின் முதுகுப்புறம் சில்லியை நோக்கியிருந்தது. இது தங்களை அவமானப் படுத்துவதாக சில்லி தேசத்தினர் கருதினர். இது காரணமாக இரண்டுதேசங்களுக்கு மிடையே மன

ஸ்தாபம் ஏற்படும் போலிருந்த சமயத்தில் ஒரு பத்திரிகைக்காரர், தம் பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார். "சில ஆர்ஜண்டினாவையே பார்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் கடவுளுடைய கண்காணிப்பு அவர்களுக்கு அதிகமாக தேவையாக இருப்பது தான்" என்றார். அவ்வளவுதான். எல்லாரும் வயிறு வெடிக்கச் சிரித்தார்கள். பூசலும் முடிந்தது.

## பிறர் விரும்ப வேண்டுமா?

நம்மைக் கண்டு எல்லோரும் விரும்ப வேண்டும் நம்மை மெச்ச வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் இருக்கிறது.

நாம் பிறரை விரும்பினால் தான் அவர்கள் நம்மை விரும்புவார்கள். நாம் அவர்களைப் புகழ்ந்தால்தான் அவர்கள் நம்மைப் புகழ்வார்கள்.

அவர்கள் கெட்டிக்காரத் தனத்தை நாம் மெச்சினால் தான் நம் கெட்டிக்காரத் தனத்தை அவர்கள் மெச்சுவார்கள்.

அவர்களுக்கு லாபமிருந்தால்தான் நம் லாபத்திற்கு உழைப்பார்கள்.

நாம் நம்பிக்கையாக நடந்து கொண்டால் தான் அவர்களும் நம்பிக்கையாக நடந்து கொள்வார்கள்.

## புத்தகங்கள்

புஸ்தகங்கள் என்ருல் எனக்கு மிகவும் பிடிக்கும். அவற்ருல் எவ்வளவு உபயோகமிருக்கிறது பாருங்கள். சிறு புத்தகமாயிருந்தால் மேஜை ஆடாமல் இருக்க மேஜை காலுக்கு அடியில் வைக்க உதவும். வழவழப்பான தோலினுல் நன்கு பைண்டு செய்யப்பட்ட புத்தகமாயிருந்தால் க்ஷவரக்கத்தியை தீட்டிக் கொள்ள உதவும். தடிப் புத்தகமாயிருந்தால் நமக்கு பிடிக்காதவர் மீது தூக்கி எறிய உதவும்.

மார்க் ட்வெயின்.

## வேலை வேண்டுமா?

தாம் ஓட்டுக் கொடுத்துச் சட்ட சபைக்கு அனுப்பிய ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ. யை ஒரு வேலையில்லாப் பட்டதாரி பார்க்கச் சென்றிருந்தார்.

"தாங்கள் எனக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னீர்களே" என்று கேட்டார்.

"நான் என்ன பண்ணலாம்? வேலையிருந்தால் தானே கொடுக்கலாம்" என்று சொன்னுர் எம். எல். ஏ.

"அப்படியானுல் என்னதான் பண்ணுவது?"

"நான் ஒன்று வேண்டுமானுல் செய்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தச் சொல்கிறேன். அதில் உங்களுக்கு வேலை கொடுக்கிறேன்"

## சவுக்கடி !

முன்னொரு காலத்தில் இப்ராஹீம் என்றொரு பிரபு இருந்தார். அவர் பெரிய சுகவாசி. அவர் தூங்குவதற்காக வைத்திருந்த மெத்தையைப் போல் அத்தனை சொகுசான மெத்தை வேறு எங்கும் கிடையாதாம். ஒரு நாள் அவர் வேலைக்காரி அந்த மெத்தையின் மீது ஆசைப்பட்டு, அதில் படுத்துப் பார்த்தாள். கால்மணி நேரம் ஆகியிருக்காது, பிரபு அதைப் பார்த்து விட்டார். உடனே அதில் படுத்ததற்காக வேலைக்காரியை சாட்டையால் 25 அடிகள் வாங்கும்படி சொன்னார். அடிபட்டதற்காக வேலைக்காரி அழவில்லை. அதற்குப் பதில் வேறு ஏதோ யோசனை பண்ணுவதுபோல் இருந்தாள். அதைக் கண்டு ஆச்சரியமுற்று, பிரபு காரணம் விசாரித்தார். வேலைக்காரி சொன்னாள் ; "கால்மணி இந்த மெத்தையில் படுத்ததற்காக 25 சவுக்கடி கிடைத்ததே, வாழ்நாள் முழுதும் படுத்ததற்காக, உங்களுக்கு அடுத்த உலகில் எத்தனை அடி விழும் என்று கணக்குப் பார்த்தேன்."

## பொய் சொன்னால்

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டுமென்கிறார்கள். ஆனால் எவ்வளவுதான் பொருந்தச் சொன்னாலும் ஒருவன் பொய் சொல்லுகிறான் என்பதை பின்வரும் அடையாளங்களால் எளிதில் கண்டு கொள்ளலாம்.

ஒருவன் பொய் சொல்லும்போது

1. அவன் கண்கள் சுருங்கும்.
2. அவன் நம் முகத்தையே பார்த்துப் பேசு வான்.
3. அவன் கன்னங்கள் சற்று வெளுப்படை யும்.
4. கைகள் அமைதியாயிருக்காது.
5. காலும் ஒரு நிலையில் இருக்காது.
6. வழக்கத்தை விட அதிகமாக யோசனை பண்ணி பேசுவான்.

## ஸ்பெயினில் நடந்தது

ஸ்பெயின் உள்நாட்டுக் கலகம் நடந்து கொண் டிருந்த காலத்தில் பிராங்கோ கட்சியைச் சேர்ந்த சில வெடிகுண்டு விமானிகள் கீழே இருந்த ஒரு பாலத்தை தகர்க்க முயன்றனர். அதற்காக எத் தனையோ வெடிகுண்டுகள் வீசினர். ஆனால் அவர் கள் எல்லாரும் வெகு மோசமான விமானிகள் ஆத லால் அவர்களால் வெடிகுண்டுகளை சரியாகக் குறி பார்த்து வீச முடியவில்லை. வெடிகுண்டுகள் பாலத்தை தகர்ப்பதற்குப் பதிலாக பக்கத்து நகர வாசிகள் மீது விழுந்து அவர்கள் சாக ஆரம்பித் தார்கள். இந்தமாதிரி ஏழு எட்டு நாட்கள் நடந்தது. நகரத்தில் வெடிகுண்டு வீச்சினால் சாவு அதிகரிக் கவே நகரவாசிகள் ஒன்றுசேர்ந்து ஒரு முடிவுக்கு

வந்தார்கள். அந்தப்பாலத்தைத் தாங்களே தகர்த்தெறிய தீர்மானித்து அப்படியே தகர்த்தெறிந்தார்கள். வெடிகுண்டு வீச்சும் நின்றது.

## கோவில் மணி

ஒரு பத்திரிகைக்காரர் விளம்பரம் வாங்குவதற்காக ஒரு பழைய கம்பெனிக்குச் சென்றார். தம் பத்திரிகையில் அவர்கள் கம்பெனியைப் பற்றி விளம்பரம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த கம்பெனியின் முதலாளி "நாங்கள் இந்த கம்பெனி ஆரம்பித்து எண்பது வருஷங்கள் ஆகின்றன. இதுவரையில் ஒரு பத்திரிகையிலும் விளம்பரம் செய்ததில்லை" என்றார். இதற்கு என்ன பதில் சொல்வது என்று பத்திரிகைக் காரருக்கு முதலில் தெரியவில்லை. பிறகு ஒரு யோசனை தோன்றிற்று.

தூரத்திலுள்ள ஒரு கோவிலைக் காட்டி "அது எத்தனை வருஷமாக இருக்கின்றது" என்று கேட்டார். "முன்னூறு வருஷமாக" என்று பதிலளித்தார் முதலாளி. "இருந்தும் கோவில் ஞாபகம் எல்லார்க்கும் ஏற்படுவதற்காகத் தினம் மூன்று தடவை மணி அடிக்கிறார்களே தெரியுமா" என்று கேட்டார். அவ்வளவுதான், உடனே தம் கம்பெனி விளம்பரத்தை அந்தப் பத்திரிகைக்குக் கொடுத்தார் முதலாளி.

## பயம் இல்லை

அமெரிக்காவில் பிரிட்டிஷ் தூதராக இருக்கும் ஹாலிபாக்ஸ் பிரபு ஒரு சமயம் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையில் சிநேக பாவத்தை வளர்க்கும் உத்தேசத்துடன் ஷை பிரசங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஒரு ஊரில் ஹாலிபாக்ஸ் பிரபு பிரசங்கத்தை முடித்து விட்டு தமது காரில் ஏறிக் கொள்ளும்போது, அவர் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு குடியானவன் அவரிடம் வந்தான்.

“ஐயா! உங்கள் பிரசங்கத்துக்காக ரொம்ப வந்தனம். இதுவரை அமெரிக்கர்கள் பிரிட்டிஷாரோடு சிநேகபாவம் கொள்ளாததற்குக் காரணம், தங்களைவிட பிரிட்டிஷார் ரொம்பக் கெட்டிக்காரர்களோ என்ற பயம் இருந்து வந்ததுதான். உங்கள் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு அந்த பயம் போய் விட்டது. இனிமேல் நம் இரண்டு தேசங்களும் சிநேக முறையில் இருக்கும்!” என்றான்!

## கூடாது

பாலர்களுடன் ஆலோசனையோ, பெரியவர்களுடன் விரோதமோ, பர ஸ்திரீகளைக் கண்டு சிரிப்பதோ, ஆழம் தெரியாத ஜலத்தில் இறங்குவதோ கூடாது.

## கான்கானுன் பிரபு

அக்பர் சமஸ்தானத்தில் கான்கானுன் என்றொரு பிரபு இருந்தார். ஒரு சமயம் அவர் தெருவில் போய்க் கொண்டிருந்த போது யாரோ ஒருவன் அவர் மீது கல்லை விட்டெறிந்தான். உடனே கான்கானுன் தம் வேலையாட்களைக் கூப்பிட்டு, கல்லை விட்டெறிந்தவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி சொன்னார். எல்லாரும் ஆச்சரியப் படவே, அதற்கு அவர் சொன்னார் "மரத்தை நோக்கிக் கல்லெறிந்தால் பழம் கிடைக்கும். என்னை நோக்கிக் கல்லெறிந்துவிட்டு, அவன் வெறும் கையுடன் போகலாமா?"

## குட்டி எட்டடி பாய்ந்தால்

வகுப்பில் ஒரு வாயாடிப் பையன் இருந்தான். உபாத்தியாயருக்கு அவனுடைய வாயாடித்தனம் சகிக்கவே முடியவில்லை. இது விஷயத்தை அவனுடைய தகப்பனுருக்குத் தெரிவிப்பதற்காக அவனுடைய பிராகரஸ் ரிபோர்ட்டில் "பையனுக்கு வாய் ரொம்பஅதிகம்" என்று எழுதி அனுப்பினர். பிராகரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்து இட்டு அனுப்பிய தகப்பனர் கூடவே பக்கததில் "தாங்கள் அவனுடைய தாயாரைப் பார்க்க வேண்டும். அப்பொழுது பையனைச் சொல்ல மாட்டீர்கள்" என்று எழுதி அனுப்பினர்.

## எல்லையில்லாத் தொல்லை

காலேஜில் சேர்ந்து இருந்த மாணக்கன் துணி மணிகள் வாங்குவதற்காக அடிக்கடி தகப்பனருக்கு பணம் எழுதிக் கேட்டான். தகப்பனரால் தொல்லை பொறுக்க முடியவில்லை. ஒரு நாள் மாணக்கனுக்கு தகப்பனரிடமிருந்து ஒரு கடிதமும் பார்சலும் வந்தது. "துணி மணிக்காக என்னல் அடிக்கடி பணம்அனுப்ப முடியவில்லை. ஆகவே அதற்குப் பதில் இந்தப் பார்ஸல் அனுப்பியிருக்கிறேன். அதை வைத்துக் கொள்" என்று அக்கடிதத்தில் கண்டிருந்தது. மாணக்கன் மிக ஆவலாக பார்சலைப் பிரித்துப் பார்த்தான். அதில் ஒரு சோப்புக்கட்டி இருந்தது!

## விளையும் பயிர்

"குழந்தை பிறந்த ஒரு வருஷத்துக் கெல்லாம் பேச ஆரம்பித்து விடுகிறது. ஆனல் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் இரண்டு, மூன்று மாதங்கள் முன்னலேயே பேச ஆரம்பித்து விடுகின்றன" என்று பியர்ஸ் சைகிளோபீடியா என்னும் 'பொருள் களஞ்சிய' நூல் கூறுகிறது.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல் பெண்களுக்கு பேச்சில் எத்தனை பிரேமை என்பது குழந்தைப் பருவத்திலேயே தெரிய ஆரம்பித்து விடுகிறது பார்த்தீர்களா?

## உங்கள் வருமான வரி

வருமான வரி செலுத்துகிறவர்கள், தற்சமயம் என்னென்னவோ நமூனுக்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியிருக்கிறதல்லவா? அவற்றைச் சுலபப்படுத்துவதற்காக ஒரு புது நமூனுக்கண்டு பிடித்திருக்கிறார்களாம். அதில் பின் வரும் நான்கே நான்கு வாங்கியங்கள் மட்டும் தான் இருக்குமாம்.

இந்த வருஷம் உங்களுக்கு எவ்வளவு வருமானம் வந்தது ?

அதில் எவ்வளவு செலவழித்தீர்கள்?

மீதி எவ்வளவு இருக்கிறது?

அதை எங்களுக்கு அனுப்பிவிடுங்கள்.

## கஜக்கோல்

பழைய காலத்தில் சீமையில் கஜக்கோல் ஒரு சமயம் இருந்தது போல் இன்னொரு சமயம் இருக்காதாம். ஒரு சமயம் நீளம் அதிகமாகவும் இன்னொரு சமயம் நீளம் குறைந்தும் காணப்படுமாம். அந்த சமயத்தில் யார் ராஜாவோ அந்த ராஜாவின் முழுக்கை நீளம் ஒரு கஜமாகக் கருதப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

## டெலிபோன் செய்தி

ஒருவர் தம் வீட்டில் மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தார்.

அந்த சமயம் வாசல் கதவை யாரோ பட படவென்று தட்டினார்கள். பாடகருக்கு மிகவும் கோபம் வந்தது. சங்கீத ரஸனை இல்லாத இப்படிப் பட்ட ஆத்மாக்களும் இருப்பார்களா என்று, பாட்டை நிறுத்திவிட்டுக் கதவைத் திறந்தார். வாசலில் திரு திரு என்று விழித்துக்கொண்டு, இரு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். பாடகரைக் கண்டதும்,"ஏஞ்சாமி! இந்த வீட்டிலே ஏதோ கொலை நடக்கிறதாமே! யாரோ தியாகய்ய ராம், அவங்களை யாரோ கொன்று கொண்டிருக்கிறார் கள் என்று டெலிபோனில் சொன்னாங்க. அதுதான் வந்திருக்கிறோம்" என்றார்கள்.

## குலிஸ்தான்

வாழ்க்கையின் சௌகரியத்திற்காகப் பணம் ஏற்பட்டதேயல்லாமல் பணம் சம்பாதிப்பதற்காக வாழ்க்கை ஏற்படவில்லை. "பாக்கியசாலி யார்? துர்பாக்கியசாலி யார்?" என்று ஒரு அறிஞரைக் கேட்டேன். "பணத்தைச் சம்பாதித்து அனுபவித் தவன் பாக்யசாலி. பணத்தைச் சம்பாதித்து அனு பவிக்காமல் செத்தவன் துர்பாக்யசாலி" என்று அவர் சொன்னார்.

பழக்கமில்லாத செல்வமும், வாதமில்லாத படிப் பும், சர்க்கார் இல்லாத அரசாங்கமும் நிலைத்து நிற்காது.

நிலத்தை நன்கு உழுது விதைவிதைக்காமல்

விட்டிருந்தால் எப்படியோ அதைப்போலத்தான் நன்கு படித்து, படித்ததை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வராமலிருப்பது.

—குலிஸ்தான்.

## ரொம்ப வேலை

"நானே ஒரு மகாத்மா. அப்படியிருக்கும் போது, நான் மகாத்மா காந்தியைப்பற்றி எப்படி அபிப்பிராயம் சொல்ல முடியும்?" என்று ஒரு சமயம் பிரபல ஆங்கில ஆசிரியரான பர்னுர்ட் ஷா ஒரு இந்தியப் பத்திரிகைக்காரருக்குப் பதிலளித்தார். இவ்வாறு வேடிக்கையாகவும் விஷயாகவும் பளிச் சென்று பதிலளிப்பதில் ஷாவை யாரும் மிஞ்ச முடியாது.

இப்பேர்ப்பட்ட ஷாவை, தமது வீட்டில் விருந்து சாப்பிட வரும்படி ஒரு ஸ்திரீ அழைத்தார். "திங்கட்கிழமையன்று உங்களால் வர முடியுமா?" என்று கேட்டார் அந்த ஸ்திரீ.

"மன்னிக்கவேண்டும். அன்று என் டாக்ரைப் பார்க்கப் போகிறேன்" என்ருர் ஷா.

"அப்படியாளுல் விருந்தை செவ்வாய்க்கிழமை வைத்துக் கொள்ளலாமே!"

"இல்லை: என் நண்பர் ஒருவர் உடம்பு சுகமில்லாமல் இருக்கிருர். அன்று அவரைப் பார்க்கப் போகவேண்டும்."

" அப்படியானல் கட்டாயம் புதன்கிழமை வரு வீர்கள். இல்லையா ?"

" அடடா, அன்று நான் கிராமத்துக்கு வருவ தாக வாக்களித்திருக்கிறேனே." அந்த அம்மாள் அப்படியும் விடுகிற வழியாயில்லை.

" சரி : அப்பொழுது வியாழக்கிழமை விருந்தை வைத்துக் கொள்ளலாம்."

" அன்று சில சிநேகிதர்களுடன் படகில் யாத் திரை செய்யப் போகிறேன்."

" வெள்ளிக்கிழமை உங்களுக்குச் சௌகரியப் படுமா ?"

" அன்று என் நாடகம் ஒத்திகை நடக்கிறது. நான் அதற்குப் போகவேண்டும்."

" சனிக்கிழமை ?"

" ஐயோ, அன்று நான் ஒரு கலியாணத்துக்குப் போக வேண்டுமே !"

" அப்படியானல் கட்டாயம் ஞாயிற்றுக்கிழமை வைத்துக் கொள்வோம் !"

பர்னார்ட்ஷாவினல் பொறுக்க முடியவில்லை.

" ஞாயிற்றுக்கிழமையன்று எனக்குக் கர்மாந் தரம் நடக்கிறது. அதற்குப் போகவேண்டும் !" என்றார்.

## புடவையின் மகத்துவம்

அமெரிக்காவுக்குப் போய்த் திரும்பி வந்த ஸ்ரீமதி மேனன் தமது அமெரிக்க அனுபவங்களை சென்னை ரேடியோவில் பேசினர். அப்பொழுது அவர் கூறியதாவது :

" அமெரிக்காவில் நமது புடவைக்கு ஏற்பட்டிருக்கும் மகத்துவத்தை இவ்வளவு என்று சொல்ல முடியாது. நியூயார்க் நகரில் 'ஐந்தாவது அவன்யூ' போன்ற இடங்களிலும் பிரபல கடைத் தெருக்கள் வழியாகவும் இந்தியப் பெண் யாராவது புடவை அணிந்து சென்றால், எல்லோரும் மிகவும் ஆச்சரியத்துடன் அவளையே பார்க்கிறார்கள். 'ஆஹா! எவ்வளவு அழகாயிருக்கிறது!' என்று ரகசியமாகத் தங்களுக்குள் சொல்லிக் கொள்கிறார்கள். 'இவள் யார்? எந்த தேசத்து ராஜகுமாரியோ?' என்று ஆவலுடன் கேட்டுக் கொள்கிறார்கள்."

—இவ்வாறு கூறிவிட்டுப் பின்வரும் எச்சரிக்கையும் செய்தார் ஸ்ரீமதி மேனன். " ஆனல் புடவை அணிந்து சென்றால் எங்குமே இந்த உபசாரம் கிடைக்குமென்று எண்ணவேண்டாம். நான் நியூயார்க்கில் ஒரு தெரு வழியாகப்போய்க்கொண்டிருந்தேன். சிறுவர்களும் சிறுமிகளும் என்னைச் சூழ்ந்து கொண்டு என்னுடன் ஓடி வந்தார்கள். என்னைப் பார்த்துப் பரிகாசமும் செய்தார்கள். ஒரு அம்மாள் என்னிடம் கையை நீட்டி ஏதோ கேட்டாள். விசாரி

த்ததும், நான் ஒரு குறி சொல்லும் பிச்சைக்காரி என்று நினைத்துவிட்டாள் என்று தெரிந்தது. ஆகவே, புடவை அணியும் இந்திய மாதர்கள் அமெரிக்காவில் உபசாரத்துக்கும் தயாராக இருக்க வேண்டும்: குறி சொல்லச் சொன்னால், 'எனக்குத் தெரியாது' என்று சொல்லவும் தயாராக இருக்க வேண்டும்.''

## நல்லவர்கள்

கிளிகள் கூண்டில் அடைக்கப் படுகின்றன. காக்கைகளோ உல்லாசமாகத் திரிகின்றன. அதைப் போல நல்லவர்கள் கஷ்டப் படுகிறார்கள். மற்றவர்கள் சுகப்படுகிறார்கள்.

## செவிடு

"பக்கத்து அறையில் இருப்பவன் யாரோடு பேசிக் கொண்டிருக்கிறான் ?''

"அவன் தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கிறான்.''

"பின் ஏன் அப்படி கத்துகிறான் ?''

"அவன் செவிடு. அதனால்தான்''

## ரேடியோ

"ரேடியோவினால் பத்திரிகை வியாபாரம் கெடாதா ?''

“ எப்படி கெடும் ? ரேடியோ பெட்டி பல்பொடி மடிக்க உதவுமா ?”

## பேசிக் தமிழ்

850 வார்த்தைகள் இருந்தால் போதும். அதை வைத்துக் கொண்டே எல்லாக் கருத்துக்களையும் தெளிவாக உணர்த்த முடியும் என்று ஆங்கிலத்தில் 850 வார்த்தைகள் தனியாகப் பொறுக்கி வைத்திருக்கிறார்கள். இதற்கு ‘பேசிக் இங்கிலீஷ்’ என்று பெயர்.

“இதே மாதிரி பேசிக் தமிழ் ஒன்று கண்டு பிடித்தோமானல், அதில் இரண்டே இரண்டு வினைச் சொற்கள் மாத்திரம் இருந்தால் போதும்” என்றார் அறிஞர் வ. ரா. “எப்படி” என்று கேட்டதற்கு, “தமிழர்கள் செய்வதெல்லாம் இரண்டே, இரண்டு காரியங்கள் தான். ஒன்று உண்பது. இன்னொன்று உறங்குவது. இந்த இரண்டு காரியங்களையும் தெரிவிக்க இரண்டு வினைச்சொல் தானே தேவை ?” என்றார்.

## ரகசியம்

இரண்டாவது மகா யுத்தம் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருந்த சமயத்தில் ஒரு கடற்படை அதிகாரியை அவருடைய நண்பர் பார்க்கவந்து சேர்ந்தார். பேச்சுவாக்கில், ஜெர்மானியர் நேச தேசக்கப்பல்களை மூழ்கடித்துக் கொண்டிருந்த

விஷயம் வந்தது. "தினம் எத்தனை கப்பல்கள் மூழ்கடிக்கப் படுகின்றன?" என்று நண்பர் கேட்டார். அதற்கு, கடற்படை அதிகாரி "உங்களால் ரகசியத்தை வெளியில் விடாமல் வைத்திருக்க முடியுமா" என்று கேட்டார். "முடியும்" என்றார் நண்பர். "என்னாலும் முடியும்" என்றார் கடற்படை அதிகாரி!

## பிரிட்டிஷ் தந்திரம்

பிரிட்டிஷ்காரர்கள் ரொம்பப் பொல்லாதவர்கள். தங்கள் குறைகளைத் தாங்களே எடுத்துக்காட்டி, தங்களைத் தாங்களே கேலி செய்து கொள்ளும் பொல்லாத்தனமும் அவர்களுக்கு உண்டு. இதற்கு ஒரு உதாரணம். பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றில் பின் வரும் ஹாஸ்யத் துணுக்கு வெளியாகியிருப்பது :—

பிரிட்டிஷ் காலனிகளைப்பற்றி ஒரு கட்டுரை எழுதும்படி ஒரு பள்ளிக்கூடத்தில் கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்கு ஒரு பையன் பின்வருமாறு பதில் எழுதினான். "ஆப்பிரிக்கா பிரிட்டிஷ் காலனிகளிலேயே மிகப் பெரிய தேசம். இப்பொழுது, பிரிட்டன் எப்படித் தன் காலனிகளைச் சம்பாதித்துக் கொண்டது என்பதைக் கூறுகிறேன். முதலில் பிரிட்டிஷார் ஒரு பாதிரியைப் பிடித்து வெளியே அனுப்புவார்கள். எங்கேயாவது செழிப்பான நல்ல பூமியைப் பார்த்துவிட்டால், அவர் உடனே அங்

குள்ள சுதேசி மக்களை ஒன்று கூட்டி, "நாம் கடவுளைத் தியானிப்போம்!" என்று சொல்லுவார். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்யும் வேளையில் சந்தடி செய்யாமல் பிரிட்டிஷ் கொடி மேலே உயர்ந்து விடும்!"

## மணி என்ன?

கைக்கடிகாரம் கட்டிக் கொண்டிருப்பவர்கள் அடிக்கடி தங்கள் கடிகாரத்தைப் பார்ப்பதைக் கவனித்திருக்கலாம். அடுத்த தடவை உங்கள் நண்பர் யாராவது அப்படி மணி பார்க்கும்பொழுது "மணி என்ன?" என்று அவர்களைக் கேளுங்கள். அவர்கள் திரு திரு என்று விழிப்பார்கள். திரும்பவும் ஒரு தடவை கடிகாரத்தைப் பார்த்தால்தான் அவர்களால் மணி சொல்லமுடியும். ஏனெனில் முக்கால்வாசி இந்தமாதிரி கடிகாரத்தைப் பார்ப்பவர்கள் மணி என்னவென்று தெரிந்து கொள்வதற்காகப் பார்ப்பதில்லை. ஏதாவது ஒரு காரியத்தை மனதில் வைத்துக் கொண்டு அதற்கு இன்னும் காலம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் பார்க்கிறார்கள். கடிகாரத்தைப் பார்த்து கால் மணி நேரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்கிறார்களே ஒழிய மணி என்ன என்பதை தெரிந்து கொள்வதில்லை.

## உங்களால் முடியுமா ?

ஒரு காகிதத்தை ஐம்பது தடவை உங்களால் மடிக்க முடியுமா? அதற்கென்ன, மடித்தால் போச்சு என்றுதான் நீங்களெல்லாம் சொல்லுவீர்கள். ஆனல் யோசித்துப் பார்த்தால்தான் இது முடியாத காரியமென்று தெரியும்.

ஒரு காகிதத்தை மூன்று தடவை மடித்தாலே அதனுடைய கனம் 8 மடங்காக ஆகிறது. ஏழு தடவை மடித்தால் 128 மடங்கு ஆகிறது. ஒரு காகிதத்தை 20 தடவை மடித்தால் அதன் கனம் 20 கஜமாக இருக்கும். 24 தடவை மடித்தால் அதன் கனம் 450 கஜமாக இருக்கும். 30 தடவை மடித்தால் அதன் கனம் பூமியின் குறுக்களவாக இருக்கும். 44 தடவை மடிப்பதற்குள் காகிதத்தின் கனம் சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கும்.

ஆனல் காகிதம் எவ்வளவு அகலமிருந்தால் இது சாத்தியமான காரியமென்பது தெரியுமா? அமெரிக்கா அகலம் காகிதம் இருந்தால் தான் இது முடிகிற காரியம்.

---

# நாடோடி எழுதிய நூல்கள்

---

## நாடகமே உலகம்

(மூன்றும் பதிப்பு) ரூ. 3

"In these articles the author has demonstrated with what great ease a clever writer can humorously portray the faults and foibles of our society. A score of such books can do more social reform than a thousand platform politicians" என்று இப்புத்தகத்தைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகிறது.

## இதுவும் ஒரு பிரகிருதி

(இரண்டாம் பதிப்பு) ரூ. 3

"சில வக்ர சுபாவங்களைக் கூர்மையாகக் கவனித்துள்ள இந்த ஆசிரியர் தமக்குள்ள ஒரு அலாதியான திறமையுடன் ஹாஸ்யம் ததும்ப எழுதியிருப்பதை ரஸிக்காமல் சிரிக்காமல் படிக்க முடியாது" என்று தினமணிப் பத்திரிகை இப்புத்தகத்தைப் புகழ்ந்துள்ளது.

## பிழைக்கும் வழி

(இரண்டாம் பதிப்பு) ரூ. 2-8-0

"இது ஒரு சிறிது காலத்திற்குத் தோன்றி நின்று பின் மறையும் நூல்கள்போல் அல்லாமல் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய புத்தகமாய் இருக்கும். இதை, இதில் இரண்டாவது பதிப்பு தோன்றியிருப்பதே மெய்ப்படுத்தும்" என்று அகில இந்திய ரேடியோ இந்தப் புத்தகத்தைப் பற்றிக் கூறுகிறது.

## ஒரு நாள் கூத்து

(இரண்டாம் பதிப்பு) ரூ. 3

"Witty, philosophical and in everyway humane, Nadodi is a class of Tamil writer without any rival in his way of writing in Tamil to-day. I wish he gives more books of this type" என்று விப் என்னும் கல்கத்தாப் பத்திரிகை இந்தப் புத்தகத்தைப் புகழ்கிறது.

## படித்த பெண் வேண்டாம் ரூ. 3

படித்த பெண்களைக் கண்டாலே நாடோடிக்கு நடுக்கம்தான். ஏன் என்று இந்தப் புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

## அட பரமசிவா ரூ. 3

"வாழ்க்கையைச் சீர்திருத்த முயல்வதில் எழுத்தாளர்கள் பல முறைகளையும் கையாளுகிறார்கள். வாழ்க்கையில் தான் கண்டு சிரிப்பதை பிறரும் கேட்டு சிரிக்க வைப்பது இவற்றில் ஒன்று. இம் முறையைப் பயன்படுத்திக் கொள்வதில் நாடோடி கை தேர்ந்தவர்" என்று திருச்சி ரேடியோ இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

## எங்கள் குடும்பம் பெரிது ரூ. 2-8-0

இந்தப் புத்தகம் ஒவ்வொரு குடும்பத்தாரும் படித்து மகிழவேண்டிய புத்தகம். சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை வெகு ஹாஸ்யமாக இப்புத்தகம் சித்தரிக்கிறது. இதில் உள்ள யுத்த ஆரம்பம், யுத்தம் நடக்கிறது, யுத்தம் வலுக்கிறது, இறுதிவெற்றி இந் நான்கு அத்தியாயங்களும் ஹாஸ்ய சிகரத்தை எட்டிப் பிடிக்கின்றன என்று சொன்னாலும் மிகையாகாது.

## ஹே, அனுராதா ரூ. 3

"நாடோடியின் புத்தகத்தைப்பற்றி மதிப்புரை சொல்லிக்கொண் டிருக்கக்கூடாது. படித்துத் தொலைக்க வேண்டிய புத்தகங்கள் அவர் எழுதுபவை எல்லாம். படிக்காவிட்டால் நஷ்டம் அவருக்கல்ல" என்று அகில இந்திய ரேடியோ திருச்சி நிலையம் இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

## என்னைக் கேளுங்கோன்னா! ரூ. 4

"தமிழர்களுக்குச் சிரிக்கத் தெரியாது, ஹாஸ்ய நுட்பத்தை அனுபவிக்கும் இதயமில்லாதவர் என்ற கூற்றைப் பொய்யாக்கிய ஒரு சில எழுத்தாளர்களில் நாடோடி ஒருவர்" என்று அகில இந்திய ரேடியோ இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

## குடும்ப ரகசியம் ரூ. 3

நாடோடி எழுதிய ரேடியோ நாடகங்கள், பேச்சுக் களின் தொகுப்பு இந்தப் புத்தகம். கால்மணி நாடகங் களும், ஒரு மணி நாடகங்களும் உள்ளன. இதில் வெளி யாகியுள்ள "ஏழையாவது எப்படி!" என்னும் ஒரு மணி நாடகம் இதுவரை அச்சில் வெளிவந்ததே இல்லை.

புத்தகம் வேண்டுவோர் பின்கண்ட
விலாசத்துக்கு எழுதுக.

**நாடோடி**

தியாகராயநகர் :: சென்னை 17.